திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு தொழிற்சங்கப் போராட்டத்தில் இருக்கிற ஜன நாயகத்தைப் பறிக்கின்ற செயலாகும். அவர் திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலில் தொழிற்சங்கத்தை ஆரம் பிக்கிற நேரத்தில், அந்தப் பேரவைக்குத் தலைவராக அவரைப் போட்டுத்தான் நாங்கள் ஆரம்பித்தோம். அப்படிப்பட்ட ஒரு தொழிற்சங்கத் தலைவராக இருந்து, அந்தக் காலத்திலே அரசியலை ஆரம்பித்த மனோகரன் அவர்கள் இன்றைக்கு வேலைநிறுத்தம் வாபஸ் வாங்கினால் பேச்சு, வேலை நிறுத்தம் செய்தால் வேறு ஆட்களை வைத்து வேலை செய்வோம் தொழிற்சங்க உரிமைகளை மதிக்கமாட்டோம் என்ற நிலை எடுத்திருக்கிற காரணத்தால் அதைக் கண்டித்து, இந்த ஒரு பொருள் பற்றி, இதற்காக மட்டும் வெளியே சென்றுவிட்டு அடுத்த பிரச்சினையிலே கலந்துகொள்கிறோம்.

*(அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)*

*10.50 மணி*

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தாய் வீடாக இருந்தாலும், சேய்க்கு பல நிபந்தனைகளைப் போட்டு, இங்கே தாய் வீட்டின் சார்பிலே சொல்லப்படுகிற காரணத்தாலே இது எங்களுக்கு ஏற்புடையதல்ல. பொது மக்களை பாதிக்கின்ற அளவுக்கு இது தொடர்ந்து சென்று கொண் டிருக்கின்ற காரணத்தினாலே இத்தகைய நிபந்தனைகள் இல்லாமல் இதைப் பேசிட அவர்களை அழைக்காத காரணத் தினாலே, அவர்களுடைய மனக்குறையையும், மக்கள் மனக் குறையையும் வெளிப்படுத்தி நாங்களும் வெளிநடப்புச் செய் கிறோம்.

*(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து மேலும் விவா திக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

(அ) பல்கலைக்கழக மானியக் குழு நடத்தும் தேர்வு மூலம் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படும் முறை குறித்து.

திரு. சோ. பால்ராஜ் : தலைவர் அவர்களே, " கல்லூரி ஆசிரியர் பணி நியமனத்திற்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் மூலம், அகில இந்திய அளவில் தேர்வு நடத்தி நியமனம் செய்

வதாக மைய அரசு அறிவித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்:

அறிக்கை.

இதுவரை பல்கலைக் கழகங்களில் பணிபுரிய ஆசிரியர்களை அப்பல்கலைக் கழகங்கள் தங்கள் விதிமுறைகளுக்கு உட்பட்டும்; அரசு கல்லூரியில் பணிபுரிய தமிழ்நாடு தேர்வாணையம் தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுத்தும் வந்தன. தனியார் கல்லூரிகள் வேலை வாய்ப்பகங்களின் மூலம் தகுதிவாய்ந்தவர்களை தங்கள் கல்லூரிகளில் அமர்த்தி வந்தன. நாடு முழுவதும் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் நியமனம் பெற அதற்கென நடத்தப்படும் ஒரு பொதுத் தேர்வில் கலந்து தகுதி பெறவேண்டும் என்பது 1986-ன் புதிய கல்விக் கொள்கையின் ஒரு அம்சமாகும். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை மாநில அரசுகள் அமுல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு செய்திருந்த பரிந்துரைகளிலும் இவ்வம்சம் வலியுறுத்தப்பட்டது. அதன்படி பல்கலைக் கழக மான்யக் குழு நடத்தும் தேர்வில் தகுதிபெற்றவர்கள்தான் பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என வழிமுறை வகுக்கப்பட்டிருந்தது. தமிழ் தெரிந்தவர்களுக்கு ஆசிரியர் பதவிகளில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக அந்தத்தேர்வினை தமிழ் நாடு அரசே நடத்தலாம் என்று முடிவு செய்து இவ்வரசு அதற்கேற்றவாறு ஆணைகள் பிறப்பித்தன. இதுபோன்றே அந்தந்த மாநில மொழியினை அறிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காக அந்தந்த மாநிலங்களே அந்த தேர்வினை நடத்த முடிவு செய்தன. அம்முடிவுகளை பல்கலைக் கழக மானியக் குழு ஏற்றுக்கொண்டு மாநில அளவில் அந்த தேர்வினை நடத்திக்கொள்ளுமாறு கூறியுள்ளது.

2. நமது மாநிலத்தில் அந்த தேர்வினை நடத்தும் நிறுவனமாக சென்னைப் பல்கலைக் கழகம் இவ்வரசால் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த தேர்வில் தகுதிபெற்றவர்களை பல்கலைக் கழகங்கள் தங்களின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பணியில் அமர்த்தும். அரசு கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை இந்தத் தேர்வில் (அரசு சட்டக் கல்லூரிகள் உட்பட) தகுதி

பெற்றவர்களின் பட்டியலிலிருந்து ஆசிரியர் தேர்வாணையமையம் தெரிவு செய்யும். இந்தத் தேர்வினை விரைவில் நடத்தும்படி சென்னைப் பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பல்கலைக் கழக மான்யக்குழு இந்த தேர்வினை 1989 நவம்பரில் நடத்தியுள்ளது. இன்னும் முடிவுகள் வெளியிடப்படவில்லை. பல்கலைக் கழக மான்யக்குழு தெரிவு செய்துள்ள பட்டியலிலிருந்தும், சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் தேர்வில் தகுதிபெறுபவர்களின் பட்டியலிலிருந்தும் ஆசிரியர்கள் தெரிவு செய்து நியமிக்கப்படுவார்கள்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து பல்கலைக்கழக மானியக் குழுவின் பிடியிலிருந்து, ஆசிரியர்கள் தேர்வினை மாநில அரசு நடத்திக்கொள்ள ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதோடு, சென்னைப் பல்கலைக்கழகம் இத் தேர்வினை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு இன்னும் அந்தத் தேர்வு நடத்தப்படவில்லை. ஆதலால் அந்தத் தேர்வு எப்போது நடத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகம்—பல்கலைக்கழகம், கல்லூரி இவைகளில் நியமிக்கப்படக்கூடிய ஆசிரியர்களுக்கு ஒரு பொதுத் தேர்வு நடத்தப்படவேண்டும் என்ற அந்த நோக்கத்தில் அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. உரிய நேரத்தில் நடத்துவார்கள்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு பாடத் திட்டங்களைப் பின்பற்றுவதால் இத்தேர்வு அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொருந்தும் வகையில் பொதுவான பாடத் திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தேர்வு நடத்துகிறபோது, எந்தெந்தத் துறை பாடத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் அந்தப் பொதுத் தேர்விலே ஈடுபட விரும்புகிறார்களோ, அந்தந்தத் துறை பாடங்களுக்கும் முக்கியத்துவம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். முழு விவரம் இப்போது நான் தெரிவிக்கக்கூடிய நிலையிலே இல்லை.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS